# இலக்கணம்

## இயல் - 5

## இடைச்சொல் , உரிச்சொல்

1. **சான்று தருக.**

(i) இடைச்சொல்
- (அ) கடி நகர்
- (ஆ) படி
- (இ) சாலச்சிறந்தது
- (ஈ) ஐ, கள்

(ii) ஓகார இடைச்சொல்
- (அ) மலர்க்கொடியோ
- (ஆ) நடந்தே
- (இ) உன்னுடனா
- (ஈ) நிர்மலாதான்

(iii) ஏகார இடைச்சொல்
- (அ) பேராவது
- (ஆ) வரையக்கூட
- (இ) அன்றே
- (ஈ) வரலாம்

(iv) பன்மை விகுதிகள்
- (அ) கள், மார்
- (ஆ) தவ, கடி
- (இ) போல, விட
- (ஈ) ஆல், கண்

(v) கால இடைநிலைகள்
- (அ) அத்து, அம், மை
- (ஆ) கிறு, கின்று
- (இ) தல், அம்
- (ஈ) அ, உ, இ

(vi) பெயரெச்ச, வினையெச்ச விகுதிகள்
- (அ) அ, உ, இ, மல்
- (ஆ) ஆர், அது, அ, ஆள்
- (இ) ஆ, அல், இல்
- (ஈ) போல, விட, காட்டிலும்

(vii) வியங்கோள் விகுதிகள்

(அ) ஆகவே, ஆனால்
(ஆ) இன், அது
(இ) ஆள், ஆன்
(ஈ) க, இய

(viii) வினா உருபுகள்
(அ) ஆவது, கூட
(ஆ) வரை, பற்றி
(இ) ஆ, ஓ
(ஈ) ஐ, கு

(ix) ஒரு சொல் பல பொருளுக்கு உரிய உரிச்சொல்
(அ) கண்
(ஆ) தான்
(இ) நனி
(ஈ) கடி

(x) பல சொல் ஒரு பொருளுக்கு உரிய உரிச்சொல்
(அ) உறு
(ஆ) தவ
(இ) நனி
(ஈ) அனைத்து விடைகளும் சரி

(xi) உரிச்சொல்
(அ) சாலச் சிறந்தது
(ஆ) பார்த்த பையன்
(இ) படித்து முடித்தான்
(ஈ) ஓடிய குதிரை

## 2. <u>இலக்கணக்குறிப்புத் தருக.</u>

(i) **நடந்தே வந்தான்**
(அ) தேற்றப் பொருளில் வந்துள்ளது
(ஆ) இது அல்லது அது என்ற பொருளில் வந்துள்ளது.
(இ) இசைவுப் பொருளில் வந்துள்ளது
(ஈ) அழுத்தப் பொருளில் வந்துள்ளது.

(ii) **பறக்கும் தட்டு நேற்றுப் பறந்ததாம்**
(அ) வினாப் பொருளில் வரும் இடைச்சொல்
(ஆ) இசைவு பொருளில் வரும் இடைச்சொல்
(இ) வதந்திப் பொருளில் வரும் இடைச்சொல்
(ஈ) அழுத்தப் பொருளில் வரும் இடைச்சொல்

(iii) நிர்மலாதான் நேற்று பாடினாள்
(அ) வினாப் பொருளில் வரும் இடைச்சொல்
(ஆ) இசைவு பொருளில் வரும் இடைச்சொல்
(இ) வதந்திப் பொருளில் வரும் இடைச்சொல்
(ஈ) அழுத்தப் பொருளில் வரும் இடைச்சொல்

(iv) இன்றைக்கு மழை பெய்யுமோ?

(அ) வினாப் பொருளில் வரும் இடைச்சொல்

(ஆ) ஐயப் பொருளில் வரும் இடைச்சொல்

(இ) எதிர்மறைப் பொருளில் வரும் இடைச்சொல்

(ஈ) சிறப்புப் பொருளில் வரும் இடைச்சொல்

(v) படிப்பு மட்டும் இருந்தால் போதும்

(அ) தேற்றப் பொருளில் வந்துள்ளது

(ஆ) இது அல்லது அது என்ற பொருளில் வந்துள்ளது.

(இ) வரையறைப் பொருளில் வந்துள்ளது

(ஈ) அழுத்தப் பொருளில் வந்துள்ளது

(vi) மாநகர்

(அ) உரிச்சொல்

(ஆ) பெயர்ச்சொல்

(இ) இடைச்சொல்

(ஈ) வினைச்சொல்

## 3. <u>கோடிட்ட இடங்களை நிரப்புக.</u>

(i) ---------------------------- தனித்து இயங்காது.

(அ) பெயர்ச்சொல்

(ஆ) வினைச்சொல்

(இ) இடைச்சொல்

(ஈ) திசைச்சொல்

(ii) பெயரையும் வினையையும் சார்ந்து அவற்றிற்கு முன்னால் வந்து பொருள் உணர்த்துவது ---------------- எனப்படும்.

(அ) பெயர்ச்சொல்

(ஆ) இடைச்சொல்

(இ) வினைச்சொல்

(ஈ) உரிச்சொல்

(iii) உடைய, கு, ஆனால், போல, உடன் போன்றவை -------------------------.

(அ) பெயர்ச்சொற்கள்

(ஆ) வினைச்சொற்கள்

(இ) உரிச்சொற்கள்

(ஈ) இடைச்சொற்கள்

(iv) ------------------------- மொழிப் பயன்பாட்டை முழுமையாக்குகின்றது.

(அ) வினையாலணையும் பெயர்

(ஆ) இடைச்சொல்

(இ) உரிச்சொல்

(ஈ) தொழிற்பெயர்

(v) உரிச்சொற்கள் செய்யுளுக்கே உரியன என்று கூறியவர் ----------------.

(அ) தொல்காப்பியர்
(ஆ) ஔவையார்
(இ) நன்னூலார்
(ஈ) திருவள்ளுவர்

4. <u>**கூறியவாறு செய்க .**</u>

(i) ---------------- பெரும் பொதுக்கூட்டம். (சரியான உரிச்சொல்லை எழுதுக)
(அ) கடி
(ஆ) மா
(இ) சால
(ஈ) தவ

(ii) வாளால் வெட்டினான். (அழுத்தப் பொருளாக மாற்று)
(அ) வாளை வெட்டினான்
(ஆ) வாளால்தான் வெட்டினான்
(இ) வாளைக் கொண்டு வெட்டினான்
(ஈ) வாளில் வெட்டினான்

(iii) பன்மை விகுதிகளைக் கண்டுபிடி
(அ) கிறு, கின்று
(ஆ) கள், மார்
(இ) தல், அம்
(ஈ) ஐ, ஆல்

(iv) தொழிற்பெயர் விகுதிகளைத் தேர்ந்தெடு.
(அ) கிறு, கின்று
(ஆ) கள், மார்
(இ) தல், அம்
(ஈ) ஐ, ஆல்

------------------------------------------